நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 127/2020

அரசு தரப்புக்காக அ. சா.4 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசுந்தரி | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 6 | | | |

எதிரி ஆஜரில்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on
25th day of June 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.27 )

நான் தற்போது கீழ்அனுவம்பட்டில் வசிக்கிறேன். நான் M.Sc படித்து முடித்துவிட்டு B.Ed படிக்கிறேன். அ.சா.1 எனது அம்மா. அ.சா.2 எனது அம்மாவின் அக்கா. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது அக்கா தவசுந்தரியை 2018–ல் அவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். திருமணம் ஆன பிறகு எனது அக்கா எதிரி வீட்டில் இருந்தார். அடிக்கடி சண்டை ஏற்பட்டு எங்கள் வீட்டில் இருப்பார். சமாதானம் செய்து எனது அம்மா அவர் வீட்டில் கொண்டுவிடுவார். எனது அக்காவிடம் இருந்த நகை, சமான்களை கேட்டு கொடுமைபடுத்தி எதிரியும் அவரது அம்மாவும் எதிரியின் தங்கையும் எனது அக்கா தவசுந்தரியை அடிப்பார்கள். இதை எனது அக்கா தவசுந்தரி என்னிடம் சொன்னார். 02 ஆம் தேதி 06 ஆம் மாதம் 2020 ஆம் வருடம் எனது அக்கா தவசுந்தரி எனது அம்மாவிற்கு நேரம் எனக்கு ஞாபகம் இல்லை போன் செய்து தன்னை நகை கேட்டு கொடுமை செய்வதாக தவசுந்தரி

சொன்னார். 03 ஆம் தேதியும் இரவு எனது அக்கா எனது அம்மாவிற்கு போன் செய்து நகை கேட்டு கொடுமைபடுத்துகிறார்கள் என்றும் நீ உயிரோடு இருப்பதே வேஸ்ட் என்று ஆஜர் எதிரியின் வீட்டில் அனைவரும் சொல்வதாக சொன்னார். மறுநாள் எனது சித்தப்பா பாரதிதாசன் பகல் 04.00 மணிக்கு எனது அம்மாவிற்கு போன் செய்து எனது அக்கா தவசுந்தரிக்கு உடல்நிலை சரியில்லை என்றும் காட்டுமன்னார்கோவில் ஜிஎச் மருத்துவமனையில் இருப்பதாக சொன்னார். அப்போது கொரோனா சமயம் என்பதால் பஸ் இல்லை என்பதால் ஆட்டோவில் காட்டுமன்னார்கோவில் ஜிஎச்–ற்கு போனோம். அங்கு சென்று பார்த்தபோது காட்டுமன்னார்கோவில் ஜிஎச்–ல் எனது அக்கா இறந்த நிலையில் கிடந்தார். வேறு யாரும் உடன் இல்லை. நாங்கள் ஆஸ்பித்திரியில் இருந்தவர்களிடம் ஏன் இப்படி தனியாக இருக்கிறார்கள் என்று கேட்டோம். அதற்கு எனது அக்கா இறந்தபிறகு அவர் போட்டிருந்த தோட்டை தவசுந்தரியின் மாமியார் கழட்டியதாக அங்கு இருந்தவர்கள் சொன்னார்கள். இறந்த உடன் நகையை கழட்டி கொண்டு பிரேதத்தை அங்கேயே விட்டு தனியாக போட்டுவிட்டார்களே சந்தேகபட்டு எனது அம்மா காட்டுமன்னார்கோவில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். சப் கலெக்டரும் போலிசாரும் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது அக்கா இறந்ததாக சொல்லும் நாளில் நான் செம்பியான்வேளாங்குடியில் இருந்தேன் என்று சொன்னால் சரிதான். எனது அம்மாவும் அங்கு தான் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது அம்மா சீர்காழியில் பூ விற்றுவிட்டு செம்பியான்வேளாங்குடி வந்தார். அங்கிருந்து நாங்கள் அனைவரும் காட்டுமன்னார்கோவில் ஜிஎச்–ற்கு போனோம். எனக்கு எப்படி தகவல் தெரியும் என்று கேட்டால் எனது அம்மா போன் செய்து சொன்னார். இந்த விவரத்தை போலிசாரிடமும் சப் கலெக்டரிடமும் விசாரணையின்போது சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. தவசுந்தரிக்கு திருமணமாகி எத்தனை வருடம் இருக்கும் என்றால் 15.07.2018 தேதியில் திருமணம் ஆனது. திருமணமான பிறகு எனது அக்கா எதிரி பிரேம்குமார் வீட்டில் தான் இருந்தார் என்று சொன்னால் அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்து இருப்பார். அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டது சம்மந்தமாக தவசுந்தரியிடம் நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அடிக்கடி அடிக்கிறார்கள் என்றும்

நகை கேட்பதாகவும் காரணமே இல்லாமல் அடிப்பதாகவும் எனது அக்கா என்னிடம் சொன்னார். இதுசம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் எனது அம்மா வேண்டாம் என்று சொல்லிவிட்டார். அவ்வாறு கொடுமைபடுத்தி இருந்தால் போலிசில் புகார் கொடுத்திருப்போம் என்றும் இல்லை என்பதால் தான் போலிசில் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் ஊர் நாட்டாமை காரர்களை வைத்து பஞ்சாயத்து பேசினோம். எனது அக்கா மருத்துவமனையில் வயிற்றுவலியால் தான் இறந்துவிட்டதாக சொன்னார்களா என்றால் அவ்வாறு இல்லை. எதிரி நான் சொன்னவாறு எனது அக்காவை கொடுமைப்படுத்தவில்லை என்றும் எனது அக்கா வயிற்றுவலியால் தான் தற்கொலை செய்துகொண்டார் என்றும் எனது அக்கா என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல காட்டுமன்னார்கோவில் மருத்துவமனைக்கு நான் போகவில்லை என்றும் எனது அக்காவின் உடல் எங்கள் வீட்டிற்கு வந்தபிறகு தான் நான் வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.47)

2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

Sd/–G.Kulasekaran
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.